# மாமதுரை

எனக்கு ஆறு வயது.,அப்பா தமிழ்நாடு கூட்டுறவில் பெரிய பதவியில் இருந்தார்.நான் கோவையில் பிறந்தேன்,உடனே விருதுநகருக்கு வந்துவிட்டேன்.விருதுநகரின் ஒவ்வொரு தெருவும் இன்னும் மனதில் அப்படியே உள்ளது.யூ.கே.ஜி படிக்கும் போது மலேரியா ரிலாப்ஸ் ஆனது..,சாகும் நிலையில் பாட்டி,தாத்தா,மாமா,மாமி எனப் பல உறவகள் என்னைச் சுற்றி........

எப்படியோ ஒருவாறு தேரினேன்........தீபாவளி நாள்....அந்த பிங்க் ட்ரெஸ்.....அப்பா பட்டாசு வெடித்துக் காட்டுகிறார்.......என் உடல் களைப்பும்,சோர்வும் மயக்க நிலையும்....அதோ எங்கோ கோன்ஸ்பீக்கரில்...‘‘அன்னக்கிளி‘‘ படப் பாடல்......இதுதான் மரியாமான்டிசொரி சொல்லும் குழந்தைப் பருவத்தின் அதிவலுவான ஞாபகசக்தி..........அம்மா ஒரு போஸ்ட்கவரைப் பிரிக்கிறார்...விபூதி---குங்குமம் என் நெற்றியில் இடுகிறார்...........‘‘ மாதேஸ்!!!பாட்டியும் தாத்தாவும் மதுரை மீனாட்சி அம்மானின் ப்ரசாதம் அனுப்பி இருக்காங்க......................‘‘

மாமதுரை என்ற சொல்லும் மீனாட்சி என்ற பெயரும் என் காதுகளில் விழுந்த முதல் தருணம்........மதுரையைப் பற்றி என் மனப் பயணம்....ஆன்மீகப் பயணம் தொடங்கியது.

**ஜப்பானா?........இந்தியாவா?**

இரண்டாம் உலகப்போரில் அணுகுண்டுக்குப் பலியான ஜப்பானின் ஹிரோஷிமா நாகாஷாகி நகரங்கள் பினிக்ஸ் பறவைகளாய் மாறி இன்று உலகில் முன்னேறிவிட்டன.நாம் மட்டும் சலைத்தவர்களா?சதா கடல்களால் தொல்லை வந்தும் மனம் தளராது அன்றே பாண்டியர்கள் மாமதுரையை உருவாக்கினர்.
கடல்கோளுக்குத் தப்பிய பாண்டிய மக்கள் மன்னனுடன் மணலூர் என்ற இடத்தினை அடைந்தனர்.இவ்வூர் மதுரைக்கு அருகே கிழக்கில் உள்ளது.தெய்வபக்தியும்,பெரியவர்களின் துணையும் உடைய மன்னன் மணலூரில் இருந்து ஆட்சி செய்தான்.வட நாட்டின் அயோதிக்கும்,அவந்திக்கும் இணையான தலைநகரை இழந்த சோகம் வாட்டியது.வால்மீகியால் சிறப்பிக்கப்பட்ட பழம் பெருமை உடையது பாண்டியனின் கடல் விழுங்கிய கபாடபுரம் அல்லவா?
வால்மீகி,யுத்தகாண்டத்தில் சீதையைத் தேடப் புறப்பட்ட வானரப் படைகளிடம் ஒவ்வொரு திசையையும் கூறி,அங்குள்ள சிறப்புகளையும் சொல்லும் போது.,,,,தென்திக்கில் கபாடபுரத்தின் சிறப்பு சொல்லப் பட்டது.
எனவே ப்ரம்மாண்டமான புதிய தலைநகரை உருவாக்க மனதால்,வாக்கால்,செயலால் முயன்றான் பாண்டியன்.

**எழுதலாமே மதுரைக்கு சகஸ்ரநாமம்!**

நான் மாடக்கூடல்,கூடல்மாநகர்,மதுரை,மருதை,ஆலவாய்,கன்னிநாடு, என எத்தனை எத்தனை பெயர்கள்??!!அப்பப்பா!!!குறைந்தது ஐயாயிரம் ஆண்டுகள் ........மதுரையின் வயது எனலாம்.வயது முக்கியம்.அதைவிட எப்படி வாழ்கிறோம் என்பதல்லவா முக்கியம்?மதுரையை விடப் பழமையான ஊர்கள் பல இருந்தன,இருக்கின்றன............இதில் மதுரை எப்படி நிலைபெற்று உள்ளது?அதுவல்லவா முக்கியம்?!

**இது என்ன சாதாரண ஊரா??/**

*ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்தின் தலைநகரம்.
*மொழிக்கு மரியாதை அளித்த சமுதாயத்தின் அடையாளம்.
*பெண்மையின் தலைமை பீடம்...........பெண்மையை எப்படி மதிப்பது என்று கற்றுக் கொள்ள வேண்டிய பலகலைக்கழகம்.
*இந்துசமயத்தின் ஒரு பிரிவான சாக்தம் என்ற தேவி வழிபாட்டின் தலைமை இடம்.

*வானத்தினைக் காகிதம் ஆக்கி எழுதினாலும் கூறி முடிக்க முடியாத பெருமைகள் மதுரைக்கு உண்டு.

ஆனால் எல்லாரும் சொல்வதை நாம் சொல்லப் போவதில்லை...................மதுரை மண் எங்களுக்கு உணர்த்திய பல விசேஷ செய்திகளைப் பகிர்ந்து கொள்கிறோம்.

வாருங்கள் மதுரைக்குப் போவோம்.................................

என் வாழ்வின் லட்சியமானது மதுரை.எனது யு.எஸ்.ஏ எது என்றால் .....அது மாமதுரை தான்.

இதோ மாமதுரையின் சரிதம்.........தமிழரின் பண்பாட்டுச் சின்னம்..........

யூ.கே.ஜி படிக்கும் போது என் சித்தியும் சித்தப்பாவும் விருதுநகர் வந்தனர்.அம்மாவின் குடும்பம் பாரம்பரிய ஆன்மீகக் குடும்பம்.எனவே சித்திக்கு மதுரை பார்க்கும் ஆசை.நான் ,அம்மா,சித்தி,அக்கா எல்லாரும் மதுரை சென்றோம்.ஆகா...அதோ நான்கு கோபுரங்களும் என் கண் முன்னே தெரிகின்றன.அம்மா பஸ்ஸில் இருந்து காட்டுகிறார்.அவ்வளவே அன்றைய ஞாபகம்.

பின்னாளில் அப்பாவுடன் அவர் ஆபிஸ் மீட்டிங் விஷயமாக மதுரை போன போது ,ஒரு ப்யூன் மாமாவிடம் சொல்கிறார்.,'' பையனை நல்லா கோயிலைச் சுற்றிக்காட்டுப்பா!!!இந்தா பணம் வேண்டியதை வாங்கிக் கொடு''..................அதற்காக அல்லவா வந்தேன்........அப்படி எதைத் தேடி வந்தேன்/???என்ன வாங்கினேன்!!!!

அதோ அந்த ப்யூன் மாமா நான் பயத்தால் கத்த கத்த என்னைத் தூக்கிப் பொற்றாமரைக் குளத்தில் கால்களை நனைத்தார்.ஆஹா..........நான் வேண்டியதை வாங்கியும் விட்டேன்..............பொம்மை ரயில் வண்டி.ஆத்மாவை உணர்ந்த ஞானி கொண்ட ஆனந்தம் அன்று எனக்கு.

அம்மாவுக்கு எந்த வயதில் தன் பிள்ளைக்கு எதைத் தர வேண்டும் என்று தெரியும்.அந்த அம்மா மீனாட்சி அம்மா தான்.அன்று ரயில் பொம்மை வாங்கித் தந்தவள் பின் பலவற்றை உரிய வயதில் தந்தும் வருகிறாள்.

பின் மதுரையைப் பற்றி ஞாபகம் இல்லை.

அந்த வருடம் முடிகிறது.............................

டீச்சர் சொன்ன ஆனந்த அதிர்ச்சி:

ஒருநாள் காலை .,வீட்டில் சாமானங்களைக் கட்டுகிறார்கள்.ஏன்???அப்பா என்னை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு என் டீச்சர் வீட்டிற்குச் சென்றார்.டீச்சரிடம் ஏதோ பேசுகிறார்.நான் டீச்சருக்கு ஏதோ சிறிய பரிசு தருகிறேன்.என்னை ஆசிர்வதித்து அவர் கூறுகிறார்.,'' மாதேஸ்...நீ இப்ப வேற ஊருக்குப் போறே தெரியுமா???அது பெரிய ஊர்.மதுரைன்னு பேரு............நல்லா படி.....!!!!!''

என்ன அப்பாவுக்கு மதுரைக்கு மாற்றலா????ஹே.........ஹே...........ஹே

**அண்ணாநகர் வீடு:**

காலை வேளை.........சாமானங்கள் இன்னும் வந்து சேரவில்லை.ஆனால் அப்பா புது வீட்டில் என்னைத் தயார் செய்கிறார்.அன்றே புது பள்ளிக்குப் போக வேண்டும்.மதுரை அண்ணாநகரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வீடு அது.அன்று அவ்விடம் மதுரையின் புறநகர்ப் பகுதியாம்.இன்று???

பள்ளி சென்று மாலை வீடு வருகிறேன்..........அம்மா சீக்கிரம் சீக்கிரமாக என்னைத் தயார் செய்கிறார்.

‘‘அம்மா...நான் விளையாடனும்.........‘‘

அம்மா.,‘‘இல்லை இல்லை........பாட்டி போனில் சொன்னாங்க.....இன்னிக்கே மீனாட்சி அம்மனை நாம் பார்க்கனும்..வா வா...‘‘

நான்,‘‘ஏன் அப்படி......என்ன அவசரம்???‘‘

அம்மா,‘‘அப்படிப் பேசக் கூடாது........இந்த ஊருக்கே மீனாட்சி தான் மஹாராணியாம்.....அவள் பர்மிஷன் உடன் தான் இங்கே வாழனுமாம்‘‘
[என் முதல் ஆன்மீகப் பயணத்திற்கு அம்மா குருவாகிச் சொன்ன வாக்கியம்
]
நான்.,‘‘சரி அப்படீனா எனக்கு ரயில் பொம்மை வாங்கித் தருவியா???‘‘

**ஆறு வயதில் நான் பார்த்த மீனாட்சி:**

நல்ல ஞாபகம் உள்ளது.பல சிலைகள்,தூண்கள் ,வாசல்கள்...தாண்டி அம்மா என்னை கூட்டிச் செல்கிறார்....என் கவனம் எல்லாம் கடைகள் பக்கமே..........

அதோ......ஒரு தாத்தா பெரிய மயில்தோகை விசிறியால் எல்லாருக்கும் வீசுகிறார்.அம்மா என்னைக் காசு தர வைத்தார்.பின்.........அதோ மிக அருகில் இருண்ட கர்ப்பக்ருஹம்........பல விளக்குகள் எரிய சிறிய அம்மா வடிவில் இரண்டு கைகளுடன் ஒருசிலை.........அம்மா சொல்கிறார்,,‘‘அது தான் மீனாட்சி‘‘

ரயில் பொம்மை,மரமாட்டுவண்டி பொம்மை,,மேக்னெட் பென்சில் பாக்ஸ்...........என் ஷாப்பிங் பட்டியல் மட்டுமே எண்ணத்தில் உள்ளது.

**மதுரையில் நவராத்ரி.......**

விருதுநகரில் இருந்து வந்தபோது நவராத்ரி கொலு பொம்மைகள் உடைந்து விட்டன.எனவே மதுரையில் வீட்டில் கொலு வைக்கவில்லை.எனது ரகளை தாங்காமல் கோவிலுக்குச் சென்றோம்.

அப்பா எத்தனை பெரிய கொலு!!!மீனாட்சியின் கர்ப்பக்ருஹத்தினைச் சுற்றி அகழியில் தண்ணீர் நிறைத்து தாமரைகள் மிதக்கவிட்டிருந்தனர்.உற்சவ மீனாட்சியைப் பார்த்தேன்......ஒன்றும் புரியவில்லை.

**பயம் காட்டிய கோபுர பொம்மைகள்:**

அடிக்கடி அம்மா ஒரு குடும்ப நண்பரின் வீட்டுக்கு ஆலமரம் பகுதிக்கு அழைத்துச் செல்வார்.அந்த வீட்டின் ஹாலில் ஜன்னலில் இருந்து பார்த்தால் மதுரையின் நான்கு கோபுரங்களும் தெரியும்.கோபுரத்தின் உச்சியில் இரு பக்கமும் உள்ள சிங்கமுகங்கள் எனக்கு பயம் தரத் தொடங்கின.

ஆலய விக்ரஹங்களைச் வளைத்து அழகாக திருவாட்சி அல்லது ப்ரபாவளி இருக்கும்.இது ஒரு ஆர்ச்.அதன் உச்சிநடுவில் சிங்கமுகம் இருக்கும்.இது பரப்பிரம்மம் சதா விழிப்புணர்வின் கீழ் விளங்கும் தத்துவத்தினைக் காட்டும்.சிங்கம் விழிப்புணர்வின் சின்னம்.

கோபுரச்சிங்கம் அன்று பயப்படுத்தின.ஏன் தெரியுமா????

விழிப்புணர்வுடன் வாழா விட்டால் வாழ்க்கை வீணே என்று எச்சரிக்கை விடத்தான்.

மெதுவாக மீனாட்சிகோவிலும்,அழகர் மலையும்,திருப்பரங்குன்றமும் என்னுள் பிணைந்தன.

மீனாட்சி கையில் உள்ள கிளியைப் பார்த்து ப்ளாஸ்டிக் கிளி வாங்கி விளையாடினேன்.

பரங்குன்ற முருகன் பொம்மை வாங்கி விளையாடி உள்ளேன்.

மயில் பொம்மை வாங்கி ,அது முருகனின் மயில் வாகனம் என்று., அதைக் குளிப்பித்து.,சளி வந்துவிட்டது என விக்ஸ் போட்டு அடி வாங்கி.........என மதுரையில் என் பால பருவம் கழிந்தது.

அடுத்த வருடமே ஈரோடு மாற்றல் ஆகி வந்துவிட்டோம்.பின் இருபது ஆண்டுகள் கழித்தே மீண்டும் என்னை மதுரை அழைத்தது.

**பள்ளிகூடம் தந்த மதுரை ஆசை:**

பதினோராம் வகுப்பு படிக்கும் போது தமிழ்மொழியின் அருமை பெருமைகளை என் தமிழ் ஆசிரியர் பல படக்கூறுவார்.அதைக் கேட்டுக் கனவுகள் பல காண்பேன்.இன்றும் அக்காலப் புலவர்களும் தமிழ்ச்சங்கமும் மதுரையில் இருந்தால் எப்பாடி இருக்கும்?என்று எண்ணுவேன்.ஒவ்வொரு நாளும் மதுரைக்குச் செல்லும் ஆசை வெறியாகவே மாறியது.ஈரோட்டில் மதுரைப் பேருந்துகளை எல்லாம் ஏக்கத்துடன் பார்த்த காலம் உண்டு.அந்த மே மாதத்தில் சித்திரைத்திருவிழாவை முன்னிட்டு மங்கை பத்திரிக்கையில் வெளியான மதுரை பற்றிய பல குறிப்புகள் என்னை மேலும் ஏங்க வைத்தது.இந்த ஏக்கம் தான் பின்னர் முழுமையாய் ஐந்து ஆண்டுகள் மதுரையில் வாழவைத்தது,இன்று சக்திவித்யா பள்ளிக்கூடம் மதுரைக்கு அருகிலேயே இடம் பெற்றது.ஆனாலும் எனக்கு மூன்று ஆண்டுகள் கழித்துத்தான் மதுரை செல்லும் பாக்கியம் கிடைத்தது.

**மண் வாசம் ,அது நம் வாசம்:**

பூமிக்கு வாசம் உண்டு.அதுவே பூமிமாதாவின் மண்வாசம்.ஒவ்வொரு ஊருக்கும் ஒரு வாசம் உண்டு.மதுரையின் வாசம் தமிழ்,பக்தி.அன்னை மீனாட்சியின் மஞ்சள் குங்குமம்,ரோஜா கந்தம் ,மல்லிகை என அடுக்கிக் கொண்டே போகலாம்.என்னுள் மண்ணுள் கலந்த தண்ணீராய் விளங்கும் மதுரையின் வாசம் பிடிப்போமா?

**நான் சந்தித்த மஹாராணி:**

கல்லூரிப் படிப்பின் இரண்டாம் வருடம்.தெய்வம் என்னையும் ப்ரதீப்பையும் கூட்டுவிக்கிறது மதுரையில்.ஜூன் எட்டாம் தேதி.காலை நாங்கள் கோயிலுக்குள் அன்னைமுன் கண்ணீர்மல்க நிற்கிறோம்.அப்பப்பா!!!!எத்தனை ஆண்டு கனவு?நனவானது!அன்னை மீனாட்சி பச்சைப் பட்டினைமஹாராணியின் பாவனையில் தோள்களில் சார்த்தி காட்சி தந்தாள்.வலது கையில் உலகை ஆளும் செங்கோல்,தூய அன்பின் அடையாளமாய் கிளி.இடது கை ஒயிலாய்த் தொங்குகிறது.தலையில் கம்பீரமாக வைர க்ரீடம் ஜொலிக்கிறது,நெற்றியில் மங்கல மஞ்சள்----தாழம்பூக்குங்குமம் கமழ்கிறது.லலிதா சகஸ்ரநாமம் வர்ணிக்கும் அன்னையின் வடிவு அப்படியே மரகதசிலா வடிவில் மதுரையில் பெரிய மரகதக் கல்லில் சிலையாகி நிற்கிறது.அன்னையின் அழகையும் தத்துவத்தினையும் விளக்கிட என்னால் முடியாது.

அன்னையின் மூக்கில் வைர மூக்குத்தி மின்னுகிறது.பருத்த ஸ்தனபாரங்கள்.,அதன் கீழ்...ஐயோ!!!உடைந்து விடுமோ என்று மனம் பதரும் படி அப்படியொரு குறுகிய

இடை.பாதங்களில் தண்டைகளும் ,சிலம்புகளும் கொஞ்சுகின்றன.ஆயிரமிதழ் தாமரைப்பூவின் அடையாளமான பத்மபீடத்தின் மீது அன்னை மஹாராணியாய் நிற்கிறாள்.

**சாதாரண பாரதப் பெண்ணின் வடிவம் தான் மீனாட்சியின் வடிவம்.ஏன் தெரியுமா?**

‘‘ அடே மனிதா!!!ஒவ்வொரு வீட்டிலும் நான் தானாடா அன்னையாய்,அக்காவாய்,தங்கையாய்,மனைவியாய்,மகளாய்...இன்னும் அனைத்து உறவுகளாய் உருவெடுத்து வாழ்கிறேன்’’......என்று சொல்லாமல் சொல்கிறாள் மீனாட்சி.

அன்னை மஹாராணி தான்.ஆனால் ஆடம்பரம் இல்லாதவள்.அன்னையின் கழுத்தில் பாரதத்தின் ஆணிவேரான குடும்ப அமைப்பின் அடையாளமான திருமாங்கல்யம் மட்டுமே புலப்படுகிறது.

கட்டிய கணவனையும்,புகுந்த வீட்டையும் பிறந்த வீட்டையும் உலகையும் பேணிடவே பெண் கல்யாணம் புரிகிறாள் அல்லவா???அவளால் தானே ஒரு மனிதன் வாழ்வில் சிறக்கிறான்??வீழ்கிறான்?

மீனாட்சி தத்துவம்:மனித உருப்பில் கண்கள் மிகவும் முக்கியம்.ஏன் தெரியுமா?நம் கண்கள் தான் விழிப்புணர்வினைக் தருகின்றன.,கருணையைப் பொழிகின்றன.அதனால் தான் அதன் பயன் உணர்ந்த முன்னோர் தெய்வத்திற்கும் கண்களைக் கொண்டே பெயரிட்டனர்.நமது கண்களாலேயே ஒருவருக்குத் தேவையான அன்பையும்,சொல்லும் விஷயத்தினையும் உணர்த்திவிட முடியும்.

அதனால் தான் அட்சி என்ற கண்ணின் மறுபெயருடன் கூடிய பல பல பெயர்களால் பெண்தெய்வங்களை அழைக்கிறோம்.

மீனின் ஒருவகை,தன் கண்களாலேயே குஞ்சுகளைப் பேணும்,பாதுகாக்கும்.அதைப் போல் அன்னை தன் அழகிய மீன் போன்ற கண்களால் உலகங்களைக் காப்பதால் ’மீனாட்சி’ எனப் படுகிறாள்.

தண்ணீர் இல்லையேல் மீன் வாழாது.அதுபோல் பெண்மை என்பது தாய்மை இல்லையேல் பயன் பெறாது என்ற தத்வத்தைக் கூற மீனாட்சி இருக்கிறாள்.

**உன் வீடு மதுரையா----சிதம்பரமா?**

தமிழகத்தில் கல்யாணமான சில காலத்தில் தலைவன் தலைவியை நண்பர்கள் கேட்கும் விளையாட்டு வினா இது.ஆனால் இதனுள் ஆழ்ந்த தத்வம் அடங்கி உள்ளது.கல்யாணம் என்ற பந்தமே ஆன்மீகப் பயணத்தின் மிகமுக்கியமான நிகழ்வு என்பதை எத்தனை பேர் அறிவோம்?ஆன்மீகப்பயணத்தின் மிகமுக்கியமான செலவு ,‘‘ஆணவம்’’ விடுதல்.மற்ற எல்லா உறவுகளை விட கணவன் மனைவி உறவில் தான் ’தான்’ என்ற ஆணவம் தலைதூக்கி ஆடும்.அவர்களுக்குள் ஆணவம் அழிப்பது என்பதே சிறந்த ஆன்மீக சாதனை ஆகும்.

இதில் ஒருவருக்கொருவர் விட்டுத்தருதல் என்பது பயத்தினால்,காமத்தினால்,கண்மூடித் தனமான அன்பினால் இருக்கக்கூடாது.ஒருவரை ஒருவர் மனதாற நம்பி சுயநலமில்லாத அன்பினால் அடங்கி வாழ்தல்.அடங்குதல் என்பதை விட ஒருவர் போகும் நல்ல வழியில் அவருடன் வாழ்வில் பயணித்தல் என்பதே ஆகும்.

இல்லத்தலைவியின் கையில் முழுபொறுப்பையும் தந்து கணவன் அவள் வழியில் நல்லவிதத்தில் வாழ்வதே மீனாட்சி தத்வம் எனலாம்.

சகல சக்தியும் ஆன மீனாட்சி தன் கணவனையும் பாண்டிய நாட்டினையும் தன் அன்பால் ஆள்கிறாள்.ஆறு மாதம் அன்னையும் ,ஆறு மாதம் அப்பனும் மதுரையை ஆள்வதாக நம்பிக்கை.

சில வீடுகளில் கணவன் வியாதி,தீய சேர்க்கை போன்ற பல காரணங்களால் வழிதவறி விட ,குடுப்பத்தின் சுமையை ஆற்றலுடன் வெற்றியுடன் நடத்தும் பெண்களின் சக்தியும் மீனாட்சி எனலாம்.

**வீட்டு மாப்பிள்ளை:**

இந்த வார்த்தைக்குப்பின்னும் ஆழ்ந்த பொருள் உண்டு.அது மனைவி வீட்டில் வீணே உண்டு கழித்து சுகம் கண்டு ஊர்சுற்றும் அடிமை மாப்பிள்ளை தத்வம் அன்று.

அன்னை மீனாட்சியின் கல்யாணம் அவள் அப்பா இறந்தபின் தான் நடக்கிறது.இறைவன் சுந்தரேஸ்வரர் ஒரு மகனின் நிலையில் இருந்தே மதுரையில் வாழ்கிறார்.தன் மாமியாரான காஞ்சனமாலை வேண்டிய போது அவர் கணவன் மலயத்வஜனின் ஆன்மாவைக் காட்டியும்,ஏழுகடல் தீர்த்தங்களை மதுரைக்கு வரவைத்தும் மாமியாருக்கு மகனாகி இன்பம் தந்தார்.தனது சீதனமான பாண்டிய மண்ணை கண்ணும் கருத்துமாய் ஆண்டார்.

‘‘மனைவியின் வீட்டினைத் தன் வீட்டைப் போல் பாவித்து கணவன் நன்மை செய்து வாழ வேண்டும்’’..........என்ற உயர்ந்த அறிவை உணர்த்திடவே ‘‘வீட்டோடு மாப்பிள்ளை’’ என்ற மரபுத் தொடர் வந்தது.

மீனாட்சிகல்யாணம் மட்டும் ஏன் அவ்வளவு சிறப்பு உடையது?

முன் கூறியபடி தலைவனும் தலைவியும் ஆணவம் அகற்றி அன்பால் பிணைந்து ஆன்மீகப் பயணம் செய்து,அறச்செயல்களால் வாழ்ந்து சேவை புரிவதே கல்யாணத்தின் பயன்.

இதையே மீனாட்சியும் ஈசரும் செய்து காட்டியுள்ளனர்.

*கயிலையில் திக்விஜயம் செய்த போது அன்னை ஈசரிடம் தன் முழு ஆணவத்தினையும் இழந்து தன் சக்திதன்மையை அறிந்தாள்.ஆன்மீகப் பயணத்தின் எல்லை தன்னுள் உள்ள மூலப்பொருளினை உணர்வது தானே?

*கல்யாணம் முடிந்து இருவரும் மதுரையை அறம் தவறாது ஆண்டனர்.

*அன்னை நல்ல மனைவியின் தன்மைகளையும்.,அப்பன் நல்ல கணவன் மற்றும் மறுமகனின் தன்மையினையும் வாழ்ந்து காட்டினர்.

*இல்லறத்தின் பயனாகிய நல்ல ஒரு வாரிசை,உக்ரகுமார பாண்டியன் என்ற தன் மகன் வடிவில் உலகிற்கு வழங்கினர்.

*எல்லாவற்றிற்கும் மேலாக சமுதாய நலனே ஈசர் சேவை என்று உணர்த்திட ,அன்பர்களுக்கு மதுரையில் திருவிளையாடல் புரிந்து அருந்தொண்டு செய்தனர்.

இவற்றால் தான் மீனாட்சியின் கல்யாணம் மிகவும் சிறப்புடன் போற்றப்படுகிறது.

மீனாட்சியின் பள்ளியறைப் பூஜையின் மகத்வம்:

பள்ளியறை என்பது தலைவனும் தலைவியும் மனதால்,வாக்கினால்,உடலால் ஐக்யமாகும் புனிதமான இடம்.ஆனால் இன்று அவ்விடம் வெறும் உடல் சுகம் காணும் கட்டில்

அறையாகவும்,பெண்களின் குடும்ப சச்சரவுகள் வெளியேறும் இடமாகவும்,தலையணை மந்திர தந்திரங்கள் ஓதும் இடமாகவும் மாறிவிட்டது.

**யார் மாறினாலும் சத்யம் மாறுமா?**

இதோ அன்னையின் பள்ளியறை பூஜையைக் காணலாம் வாருங்கள்............

என்ன ப்ரம்மாண்டமான பள்ளியறை மதுரையில்!!!தங்கக்கட்டில்,வெல்வெட் மெத்தை,தங்கப்பாத்திரங்கள்,பூக்கள்,பால்,கண்ணாடி.......சகல ஏகபோக விஷயங்களும் நம் வீட்டில் உள்ளது போலவே தான் உள்ளன.

அதோ மரகத மீனாள் இரவு அர்த்தஜாம பூஜைக்குத்தயார் .அன்னை தூயநீராடுகிறாள்.,தன் மனக் கரைகளைப் போக்கிட.ஆஹா!!!மீனாட்சி தூய வெள்ளைப்பட்டில் கற்பின் சின்னமாய் முல்லைப்பூச்சரங்களை அணிகிறாளே!

ஒரு பெண் பள்ளியறையில் கணவனுக்கு தாசியாய் மாறிட வேண்டும் என்பதை உணர்த்திட அதோ அன்னை போகத்தின் அடையாளமாய் மல்லிகை மலர்களை அணிகிறாள்.

ஒரு பெண் எவ்வளவு உயர்ந்த படிப்பும்,பணமும்,பதவியும் வகித்தாலும் வீட்டில் அன்பின் வடிவாம் தாய்,மனைவி என்ற தத்வத்தினை இன்றைய நவநாகரிக பெண்களுக்கு உணர்த்திடவே தன் அரச சின்னமான மூக்குத்தியைக் கழற்றுகிறாள்.இது ப்ரசித்தி பெற்ற,“ மூக்குத்தி சேவை” எனப்படுகிறது.

அதோ டம் டம் டம்..........வாத்திய ஒலி கேட்கிறது........மகாதேவர் சோமசுந்தரக்கடவுளின் வரவுக்கு அடையாளமாய் ஒலிக்கிறது.

மதுரை எல்லா விஷயத்திலும் மாறுபட்டதல்லவா?

இவ்வூரில் அன்னையின் பள்ளியறைக்குள் வர கணவன் அனுமதி கேட்கிறார்.என்னே பண்பு???

கட்டிய மனைவியே ஆனாலும் ,அவள் பரிபூர்ண அனுமதி இல்லாமல் அவளை நெருங்கக் கூடாது என்ற பாரதத்தின் உயர்ந்த நாகரிகத்தினை நடத்திக் காட்டுகிறார் பரமன்..,அன்னை அழைக்க உள்ளே செல்கிறார்.

தங்கத்தொட்டிலில் தாலாட்டுப்பாட்டுக்கள் ஒலிக்க சற்று ஆடுகின்றனர்.அதற்குள் நாம் நம் விண்ணப்பங்களை முன் வைக்க ,பால்,பழம்,வெற்றிலை,பாக்கு,சந்தனம்,குங்குமம் தரப்பட்டு ஜீவாத்மா பரமாத்மா ஐக்யத்தின் அடையாளமான சிவசக்தி தத்வம் உணர்த்தப்பட்டு கற்பூரம் ஆரத்தியாக முழங்கிட பள்ளியறை தாழிடப் படுகிறது,பால் ப்ரசாதம் வழங்கப் படுகிறது.

**மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழி:**

ஒரு நாடு காடானாலும்,வளமான பகுதியானாலும்,பாலைவனமானாலும் சரி மக்கள் மன்னன் எப்படி வாழ்கிறானோ அப்படியே பின்பற்றி வாழ்வர் என்பார் அவ்வையார்.அதனால் தான் தங்களுக்கு நல்வழி காட்டும் அரசனையே இறைவன் என்று மக்கள் ஏற்றனர்.ஒரு அரசனுக்கு உள்ள சகல மரியாதைகளும் பக்திகாலத்தில் கடவுளுக்கும் செய்யப்பட்டன.

கோ என்றால் அரசன்.இல் என்றால் வீடு.அரசனின் வீடான அவன் மாளிகையே எக்காலத்தில் ’கோயில்’ எனப்பட்டது.பின் கடவுளின் இடமானது.அரசனின் கொடி,முரசு,சிம்மாசனம்,வாள்,ஆயுதங்கள்,பட்டங்கள்,அவன் வரும் போது கூறும் பாராட்டுக் கட்டியங்கள்,யானை,குதிரை,தேர்,விழாக்கள்,குடை என எல்லாம் கடவுளுக்கு உரித்தானது.

அரசன் காட்டிய வழியில் மக்கள் வாழ்வர் என்ற உன்னத கோட்பாட்டினைக் காட்டவே மீனாட்சிசுந்தரேஸ்வரர் கோயிலில் அனைத்து பூஜைகளும் விழாக்களும் பாண்டிய மரபும் சைவ ஆகமவிதிகளும் பிணைந்த நிலையில் செய்யப்படுகின்றன.

எனவே நாம் அவற்றை வெறுமனே கண்டுகளிப்பதில் ஒருபயனும் இல்லை.இறைவன் நடத்திக் காட்டுவதை நாம் வாழ்வில் பின்பற்ற வேண்டும்.